IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI

**CASE NO: OS.192/2024**

DEPOSITION OF WITNESS: **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | இளமதி | | : | |
| Father's/Husband's Name<br>தந்தை/கணவர் பெயர் | : | ரகு | Calling/<br>தொழில் | : | |
| Village/கிராமம் | : | பையூர் | | : | |
| Taluk/தாலுக்கா | : | ஆரணி | Age/வயது | : | 37 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 27th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் பையூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக கூடுதல் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 28.01.2016 அன்று Aptus Value Housing Finance India Ltd என்ற நிறுவனத்தில் வாதிக்கு கொடுக்கப்பட்ட Electronic Clearing service சான்று **வா.சா.ஆ.7** ஆகும்.

2. 29.01.2016 அன்று Aptus Value Housing Finance India Ltd என்ற நிறுவனத்தில் Housing Loan Agreement போடப்பட்டு வாதிக்கு கொடுக்கப்பட்ட Copy **வா.சா.ஆ.8** ஆகும்.

3. 15.03.2016 அன்று Aptus Value Housing Finance India Ltd என்ற நிறுவனத்தில் வாதிக்கு கொடுக்கப்பட்ட Acknowledgement of Receipt of Title Deeds சான்று Copy **வா.சா.ஆ.9** ஆகும்.

4. 10.07.2024 அன்று Aptus Value Housing Finance India Ltd என்ற நிறுவனத்தில்வாதிக்கு கொடுக்கப்பட்ட கடன் கணக்குப்பட்டியல் இணையதளத்தின் மூலம் பெறப்பட்ட சான்று **வா.சா.ஆ.10** ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி கடனில் நான் தான் கடன் வாங்குபவர் ஆவேன். எனது கணவர் கடன் பொறுப்பாளர் ஆவார். மேற்படி கடனுக்கு எனது வீட்டை ஈடாக காட்டி பெற்றுள்ளேன். கடன் வாங்கும்போது வீடு கட்டப்பட்டிருந்தது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் காலி மனை தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்போதே அங்கு வீடு இருந்தது வீட்டை வைத்து தான் கடன் வாங்கினேன். வீட்டை வைத்து நான் ரூ.7,00,000/– கடன் வாங்கினேன். மேற்படி கடன் தொகையில் தாவா கிரைய ஒப்பந்தம் போடப்பட்டபோது கையிருப்பாக ரூ.3,00,000/– வைத்திருந்தேன். மீதம் இருந்த ரூ.4,00,000/–யை வீடு கட்டிட சீரமைப்பு வேலைகளுக்கு பயன்படுத்தினேன். கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட தேதியிலேயே கிரைய தொகையான ரூ.2,50,000/– முழுவதையும் என்னால் செலுத்தியிருக்க முடியும் என்றால் செலுத்தியிருக்க முடியும் ஆனால் அன்றைய தினம் எனது மாமனாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவருக்கு ரூ.1,00,000/– செலவாகிவிட்டது. மேற்படி விபரங்களை நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, கூடுதல் முதல் விசாரணை வாக்குமுலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வாங்கிய கடனுக்கு மாதம் ரூ.11,800/– தவணையையாக செலுத்த வேண்டியுள்ளது. எனது கணவருக்கு மாத வருமானம் ரூ.12,000/– என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது, எவ்வாறு மாத தவணையாக ரூ.11,800/– செலுத்துகிறோம் என்றால் 2016 காலக்கட்டத்தில் நானும் பகுதி நேரமாக பணிக்கு சென்று வந்தேன். வழக்கிற்காக கற்பனையாக அந்த காலக்கட்டத்தில் பகுதி நேரமாக பணிபுரிந்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரையம் வாங்குவதற்காகவே ரூ.3,00,000/– த்தை 2 வருடங்களாக நான் கையிருப்பாக வைத்திருந்தேனா என்றால் குடும்ப செலவிற்காக வைத்திருந்தேன். அதை வைத்து ஒப்பந்தம் போட்டேன். எனது வங்கி கணக்கை எடுத்தால் கடன் தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்யப்படும் தேதி வரை வங்கி கணக்கில் இருந்த தொகை குறித்து தெரியவரும் என்றால் சரிதான். நான் மேற்படி கடனை

பெற்று தான் கிரைய ஒப்பந்தம் போட்டேன் என்று எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த வழக்கறிஞர் அதை என்னிடம் கேட்கவில்லை. ரூ.100/-க்கு மாதம் 80காசு வட்டியாக வங்கிக்கு செலுத்தி வந்தேன். மேற்படி கடனை அதிக வட்டிக்கு மற்ற நபர்களுக்கு கொடுப்பதற்காகதான் வாங்கினேன் என்றால் இல்லை. நான் கிரையம் பெறுவதற்கு தான் ஒப்பந்தம் போட்டேன். கிரையம் பெறும் நோக்கில் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டிருந்தால் முழு தொகையையும் கொடுத்து அன்றைய தினமே கிரையம் பெற்றிருப்பேன் என்றாலும், வட்டிக்காக பிரதிவாதிக்கு கடனாகதான் தொகை கொடுத்தேன் என்றாலும், பொறுப்பிற்காக கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் என்ற நோக்கில் அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் இரண்ட வருட கால நிர்ணயம் நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை என்றால் பிரதிவாதி தான் அந்த பத்திரத்தை தயார் செய்தார். நான் இரண்டு, மூன்று மாதங்கள் கால நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்று பிரதிவாதியிடம் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. பிரதிவாதி ஆவணங்களை தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், நான் தான் ஆவணத்தை தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2025.11.27 06:12:41 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்